நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.30.04.2020

2020ம் ஆண்டு மார்ச் மாதம் 30.04.2020ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி. தே,கிருஷ்ணமூர்த்தி எம்.காம்.,
ஆணையாளர் (ம)தனிஅலுவலர்

1) இந்நகராட்சிப் ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2020ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**( ந.க.எண்.1045/2020/சி1).**
**தீர்மான எண் : 91** பதிவு செய்யப்பட்டது.

2) இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2020ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**( ந.க.எண்.1045/2020/சி1).**
**தீர்மான எண் : 92** பதிவு செய்யப்பட்டது.

3)போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்: 21ல் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு செல்லும் 14” குடிநீர் குழாயில் உள்ள வால்வு அடிப்பகுதி பழுதடைந்ததை சரி செய்து பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,600/- க்கும் இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்படி செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப் படுகிறது.மேலும் மேற்படிபணியை செய்ய உள்ளூர் நிறுவனங்களில் இருந்து விலைப் புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | விலைப்புள்ளி தாரர் பெயர் | விலை விகிதம். (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | மரகதம் லேத் & கிரிஸ், போடி | 10,600/- |
| 2. | ஸ்ரீமணி கிரில் ஒர்க்ஸ், போடி, | 10,800/- |
| 3. | சதிஸ்வெல்டிங் & கிரில் ஒர்க்ஸ், போடி, | 11,800/- |

அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 15ன்கீழ் மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் மரகதம் லேத் & கிரிஸ் நிறுவனத்தாரின் விலைப் புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது

ந.க.எண்.1069/2020/**இ1**

**தீர்மான எண் : 93** அனுமதிக்கப்பட்டது.

**4)**அ)இந்நகராட்சிக்கு சொந்தமான ஜெட்ராடிங் வாகனம் எண்.T.N.60 AW 9925 வண்டி கொரானா தடுப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் பழுது காரணமாக பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.74,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப் படுகிறது.அச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) மேற்படிபணியை செய்வதற்கு கீழ்க்காணும் 3 நிறுவனங்களில் இருந்து நேரிடையாக விலைப் புள்ளிகள் பெறப்பட்டது.

| **வ.எண்** | **விலைப்புள்ளி தாரர் பெயர்** | **விலை விகிதம். (ரூபாயில்)** |
|---|---|---|
| 1. | M/s Whale Enterprise private Limited, Coimbatore. | 73,800/- |
| 2. | M/s Pneumatic Controls, Coimbatore | 85,923/- |
| 3. | M/s Bharath Industries, Coimbatore. | 91,028/- |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் அங்கீகரிக்கப்பட்ட டீலர்களான Whale Enterprise Private Limited, Coimbatore நிறுவனத்தாரின் விலைப் புள்ளியை மிகவும் குறைவாக உள்ளதால், அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது.

**ந.க.எண்.1076/2020/இ1**

**தீர்மான எண் : 94** அனுமதிக்கப்பட்டது.

**5)**போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கள் மேற்கொள்ள வீடு வீடாக சென்று மளிகை மற்றும் பலசரக்கு பொருட்கள் விநியோகம் செய்யக்கூடிய நபர்கள் மற்றும் அவர்களது தொலைபேசி எண்கள் அடங்கிய திருத்தப்பட்ட துண்டு பிரசுரங்கள் அச்சிடுவதற்கு கீழ்கண்ட விவரப்படியாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **விவரம்** | **எண்ணம்** | **தொகை. ரூ.** |
|---|---|---|---|
| 1 | ஈஸ்வரி பிரிண்டர்ஸ், போடி | 10000 | 6,400/- |
| 3 | ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி | 10000 | 6,000/- |

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி, நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 95** அனுமதிக்கப்பட்டது.

**6)**அ) இந்நகராட்சி PH சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக பொதுமக்களுக்கு இலவச உணவு வழங்கப்பட்டு வருகிறது. தினசரி உணவு உண்ண வரும் பொதுமக்கள் வெயில் தாக்கத்திலிருந்து பாதுகாக்க அம்மா உணவக முன்பக்கம் (கிழக்கு) மற்றும் பின்பக்கம் மேற்கில் 400 ச.அடி பொய்பந்தல் 17.05.2020 வரை அமைக்கவும் நேரிடையாக உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணியை செய்யவும் அச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) மேற்படிபணியை செய்வதற்கு கீழ்க்காணும் 3 உள்ளூர் நிறுவனங்களிலிருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | விலைப்புள்ளி தாரர் பெயர் | விலை விகிதம். (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | கோபி வாடகை பந்தல் நிலையம், போடி | 5,000/- |
| 2. | குமரேசன் வாடகை பந்தல் நிலையம், போடி | 6,500/- |
| 3. | முரளி வாடகை பந்தல் நிலையம், போடி | 7,000/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள கோபி வாடகை பந்தல் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கும்,அதற்கான செலவுத்தொகை ரூ.5000/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.1088/2020/இ1**

**தீர்மான எண் : 96** அனுமதிக்கப்பட்டது.

7)அ) இந்நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் முன்னாள் மற்றும் இன்னாள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் புகைப்படங்கள் வைப்பதற்கு போட்டோ பிரேம் செலவினம் சேர்த்து உள்ளூர் நிறுவனங்களின் இருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் பெற்று வைக்கவும் அதற்காகும் உத்தேசசெலவினம் ரூ.7900/–க்கும். அச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) மேற்படிபணியை செய்வதற்கு கீழ்க்காணும் 3 உள்ளூர் நிறுவனங்களிலிருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | விலைப்புள்ளி தாரர் பெயர் | விலை விகிதம். (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | சரவணா ஸ்டுடியோ, தேனி | 7,900/- |
| 2. | விஸ்வம் டிஜிட்டல் ஸ்டுடியோ, தேனி | 8,500/- |
| 3. | நியூராயல் மீடியா, தேனி | 8,200/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 1087 /2020/இ1**

**தீர்மான எண் : 97** அனுமதிக்கப்பட்டது.

**8)** இந்நகராட்சி சொந்தமான அம்மா உணவகத்தில் கடந்த 20.04.2020 அன்று நகராட்சி மண்டல நிர்வாக மண்டல இயக்குநர்,மதுரை அவர்களின் ஆய்வின் போது மராமத்து பணிகள்மேற்கொள்ளவும், கட்டிடத்திற்கு வர்ணம் பூசவும் அறிவுறுத்தியதன்படி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 லட்சம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 1068 /2020/இ1**

**தீர்மான எண் : 98** அனுமதிக்கப்பட்டது.

**9)** போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சித்திட்டப் பணிகளை முத்திரை பதித்த மூன்றாண்டு சாதனை மலரில் வெளியிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி அவர்களின் ந.க.எண்.34/செ.ம.தொ.அ/2020 நாள்.21.02.2020 அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தினந்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு உரிய தொகை ரூ.12,096/-ஐ பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.917/2020/இ1)**
**தீர்மான எண் : 99** அனுமதிக்கப்பட்டது.

10.போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கள் மேற்கொள்ள சுண்ணாம்பு தூள் கொள்முதல் செய்ய உள்ளூர் நிறுனங்களில் தேவையான அளவு கிடைக்கப் பெறாததால் வெளியூர் நிறுவனங்களில் இவ்வலுவலக துப்பரவு ஆய்வரால் தொடர்பு கொள்ளப்பட்டதில் தேவையான அளவு இருப்பதாக தொலைபேசியில் தெரிவித்ததால் கீழ்கண்ட விவரப்படியாக விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | எண்ணம் (1 டன்) | தொகை. ரூ. லாரி வாடகை தவிர்த்து |
|---|---|---|---|
| 1 | Purex green, Coimbatore | 1 | 10395.00 |
| 2 | Radiaant Textile Process, Erode | 1 | 10941.00 |
| 3 | Shine Traders, Coimbatore | 1 | 11014.50 |
| 4 | Reliant Global Green Energy & co, Coimbatore | 1 | 8925.00 |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Reliant Global Green Energy & co, Coimbatore, நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மேலும் மேற்படி விலைப்புள்ளியினை தற்போது வாங்கி வரும் நிறுவனத்தின் விலைப்புள்ளியுடன் ஒப்பிட்டு பார்க்கையில் ஒரே விலை விகிதமாக உள்ளதால் அதனை ஏற்று Reliant Global Green Energy & co, Coimbatore நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 100** அனுமதிக்கப்பட்டது.

**11.** போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு லைசால் சோடியம் ஹைபோகுளோரைடு முகவுரை மற்றும் கையுறை உள்ளூர் நிறுனங்களில் தேவையான அளவு கிடைக்கப் பெறாததால் வெளியூர் நிறுவனங்களில் இவ்வலுவலக துப்பரவு ஆய்வரால் தொலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டதில் தேவையான அளவு இருப்பதாக 11.04.2020ம் தேதிய அறிக்கையில் தெரிவித்ததால் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனம் | விவரம் | தொகை. ரூ. லாரி வாடகை மற்றும் GST தவிர்த்து |
|---|---|---|---|
| 1 | Radiaant Textile Process, Erode | Medical mask | 15.50 |
| | | Surgical rubber gloves | 16.59 |
| | | Sodium hypo chloride | 21.80 |
| | | Lizol | 265.00 |
| 2 | Shine Traders, Coimbatore | Medical mask | 15.00 |
| | | Surgical rubber gloves | 16.59 |
| | | Sodium hypo chloride | 21.00 |
| | | Lizol | 254.00 |
| 3 | Reliant Global Green Energy & co, Coimbatore | Medical mask | 14.50 |
| | | Surgical rubber gloves | 16.40 |
| | | Sodium hypo chloride | 19.50 |
| | | Lizol | 249.00 |

மேற்கண்ட பொருட்களுக்கு நாடு முழுவதும் தேவை அதிகமாக இருப்பதால், பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Reliant Global Green Energy & co, Coimbatore, நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று Reliant Global Green Energy & co, Coimbatore நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 101** அனுமதிக்கப்பட்டது.

12. போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் பரவிவரும் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணியாக நகர் பகுதிகளில் தமிழக அரசின் அறிவிப்பின்படி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமுலில் உள்ளது. மேற்படி நோய் தொற்று பரவாமல் தடுக்கும் விதமாக மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி நகரில் உள்ள தினசரி மார்கெட்டில் பொதுமக்கள் அதிகமாக கூடுவதால் சமூக விலகல் கடைபிடிக்கும் பொருட்டு தற்காலிகமாக ஏற்கனவே உள்ள கடைகள் தென்றல் நகரில் உள்ள நீதிமன்றத்திற்கு எதிரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக இரும்பு தகடுகளால் அமைக்கப்பட்ட கடைகள் அமைக்க, மேற்படி இடத்தில் சமூக விலகல் கணக்கில் கொண்டு சுமார் 30 கடைகள் அமைப்பதற்கும் அதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண். 1012/2020/இ1**

**தீர்மான எண் : 102** அனுமதி வழங்கப்பட்டது.

13. போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் பரவிவரும் கொரோனா நோய் தொற்று தடுக்கும் பணியாக நகர் பகுதிகளில் தமிழக அரசின் அறிவிப்பின் படி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமுலில் உள்ளது. மேற்படி நோய் தொற்று பரவாமல் தடுக்கும் விதமாக மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி நகரில் உள்ள தினசரி மார்கெட்டில் பொதுமக்கள் அதிகமாக கூடுவதால் சமூக விலகல் கடைபிடிக்கும் பொருட்டு தற்காலிகமாக ஏற்கனவே உள்ள கடைகள் உழவர்சந்தை அருகில் 100 அடி சாலையில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக இரும்பு தகடுகளால் அமைக்கப்பட்ட கடைகள் அமைக்க, மேற்படி இடத்தில் சமூக விலகல் கணக்கில் கொண்டு சுமார் 20 கடைகள் அமைப்பதற்கும் அதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண். 1015/2020/இ1**

**தீர்மான எண் : 103** அனுமதி வழங்கப்பட்டது.

14. இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடம் 146 தவிர அரசாணை எண் 101 ,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள்.30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர் அளவுகோலின்படி 270 பணியிடங்கள் தேவைப்படுவதால் 54 பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.267. நாள்.30.06.2015ல் ஒப்புதல் பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித எண்.16096/பி3/2016. நாள்.27.06.2016ல் உரிய அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் அவர்லேண்ட இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு 01.09.2018 முதல் 31.08.2019 முடிய ஒராண்டு காலத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணி காலம் 31.08.2019 உடன் முடிவடைந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.501. நாள்.30.08.2019ல் பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி மேலும் மூன்று

ஆண்டுகளுக்கு தேவைப்படுவதால் 54 பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் தனியார்மயம் மூலம் பணியமர்த்தி பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் 01.09.2019 முதல் 29.02.2020 வரையிலான ஆறு மாத காலத்திற்கு 54 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 16.09.2019 மற்றும் 17.12.2019 ஆகிய தேதிகளில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு உத்திரவு வராததாலும் கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தமிழக அரசு உத்திரவிட்டதாலும் பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 01.03.2020 முதல் 30.04.2020 வரை இரண்டு மாத காலத்திற்கு பணி நீடித்து உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை உத்திரவு வராததாலும் கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தமிழக அரசு உத்திரவிட்டதாலும் பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 01.05.2020 முதல் 31.07.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.25லட்சத்தினை 2020–2021ம் ஆண்டுக்கான நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய பின்னேற்பு பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**( ந.க.எண்.3777 /2019/எச்2)**

**தீர்மான எண் : 104** அனுமதி வழங்கப்பட்டது.

15. போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு,கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்தல் போன்ற பணிகளுக்காக 1939ம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நலவாழ்வு சட்டம் விதி 53 (1) (2) மற்றும் (3)ன் படி தேவைக்கேற்ப கொசுப்புழு ஒழிப்பிற்கு தற்காலிக மஸ்தூர்கள் மூலம் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 1819/2016/L3 , நாள். 08.11.2016ம் தேதிய கடிதத்தில் தற்காலிக மஸ்தூர் பணிகளை ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் மேற்கொள்ள தெரிவித்ததற்கிணங்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 60 தற்காலிக பணியாளர்களை அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடேட், சென்னை. நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணியாளர்களின் பணி ஒப்பந்தகாலம் மார்ச் 2020 உடன் முடிவடைவதாலும், தற்போது கொரோனா வைரஸ் அதிகளவில் பரவி இந்தியா முழுவதும் 144 தடை உத்திரவு பிறப்பித்துள்ளதாலும் பொதுச்சுகாதரத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2020–2021 ம் ஆண்டு தினக்கூலி மஸ்தூர் பணியாளர்களின் ஊதிய விகித அடிப்படையில் 01.04.2020 முதல் 31.07.2020 வரையிலான நான்கு மாத காலத்திற்கு பணி நீடித்து வழங்கவும் உத்தேச செலவினத்தொகை ரூ.16,50,000/–னை 2020–21 ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண் 6709/2013/எச்2)

**தீர்மான எண் : 105** அனுமதி வழங்கப்பட்டது.

16) போடிநாயக்கனூர் நகராட்சி 2019–20ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் இந்நகராட்சியின் அனைத்து பிரிவுகளில் CWBS ன் பயன்பாட்டிற்கும், பயன்படுத்தப்படும் 15 எண்ணம் கணினிகள் மற்றும் Dotmatrix Printer 4 எண்ணம் ஆகியவற்றிக்கு ஆண்டு பராமரிப்பு (AMC) பணியை ரூ.60,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.22, நாள்.31.01.2020ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, மேற்படி பணியை மேற்கொள்ள 20.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | | ஆண்டுபராமரிப்பு தொகை | |
|---|---|---|---|---|
| | | | கணினி ஒரு எண்ணம் | பிரிண்டர் ஒரு எண்ணம் |
| 1 | M/s.Mercury Software, periyakulam | : | ரூ.1000 | ரூ.700 |
| 2 | M/s.Swetha Systems, Madurai | : | ரூ.1300 | ரூ.1000 |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Mercury Software, Periyakulam நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.382/2020/இ1)**
**தீர்மான எண் : 106** அனுமதி வழங்கப்பட்டது.

17) போடிநாயக்கனூர் நகராட்சி பொதுநிதியின் கீழ் இந்நகராட்சியின் வரி வசூல் பணிக்கு கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள 3எண்ணம் Collection Counters மற்றும் அலுவலகப்பணிக்கும் சேர்த்து மொத்தம் 5 எண்ணம் கணினி Column Matrix Printer- 2 எண்ணம், மற்றும் K7 Anti virus-20 எண்ணம் புதிதாக வாங்கும் பணியை ரூ.3,25,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.21, நாள்.31.01.2020ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, மேற்படி பொருட்கள் மேற்கொள்ள 20.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | Accer Desktop | Dot Metrix Printer | K7 Antivirus |
|---|---|---|---|---|
| 1. | M/sMercury Software,Periyakulam | ரூ.43,750/1No | ரூ.12,900/1No | ரூ.500/1No |
| 2. | M/sSwetha System,Madurai | ரூ.45,000/1No | ரூ.13,700/1No | ரூ.600/1No |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Mercury Software, Periyakulam நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை, ஏற்றுக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்: 428/2020/இ1)**
**தீர்மான எண் : 107** அனுமதி வழங்கப்பட்டது.

**8).** நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை. அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/08/குவ2 நாள்.21.09.2009இல் நகர்புர உள்ளாட்சி அமைப்புகளில் புதிய வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்குவதில் உள்ள நடைமுறையை எளிதாக்கிட அரசாணை(நிலை) எண்.97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை, நாள்.12.07.2007இன்படி புதிய வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகையாக முந்தைய ஆண்டின் தொகையில் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் (ஏப்ரல் 1ஆம் தேதி முதல்) விண்ணப்பப்படிவம் எந்த நிதியாண்டில் வழங்கப்பட்டு தொகை செலுத்தப்படுகிறதோ அந்த நிதியாண்டிற்கான தொகை வசூலிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளது. அதன் படி 2020–2021 ஆம் ஆண்டிற்கான 5 சதவீதம் உயர்வு செய்து சாலை சேதாரக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **சாலையின் வகைப்பாடு** | **2019–2020 ம்ஆண்டிற்கான சாலை சேதாரக் கட்டணம்** | **2020–2021ம் ஆண்டிற்கான 5% அதிகப்படுத்திய கட்டணம்** |
|---|---|---|
| **0–30 மீட்டர் நீளத்திற்கு** | | |
| கருங்கல் ஜல்லி சாலை | 1714 | 1800 |
| தார் சாலை | 3670 | 3854 |
| சிமெண்ட் சாலை | 4238 | 4450 |
| **30மீட்டர் முதல் 90 மீட்டர் வரை** | | |
| கருங்கல் ஜல்லி சாலை | 2690 | 2825 |
| தார் சாலை | 4644 | 4876 |
| சிமெண்ட் சாலை | 5216 | 5477 |

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1304/2020/இ2**

**தீர்மான எண் : 108** அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி